கடலூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை திரு.எம்.காந்திராஜ் பி.காம்., எம்.பி.ஏ.,

நாள்.09.07.2024

ந.க.எண்.5416/2023/எப்2

பொருள்: மனைப்பிரிவு ஒப்புதல் – கடலூர் மாநகராட்சி – மாநகராட்சிக்குட்பட்ட கரையேறவிட்டக்குப்பம் கிராமம், வார்டு எண்:3, பிளாக் எண்.:53, நகரளவு எண்:2078/7, 2078/8, 2078/11ல் உள்ள 2.42 ஏக்கர் (9794.50 சதுர மீட்டர்) இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க ஒப்புதல் கோரியது – தொடர்பாக.

பார்வை: 1.கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களுக்கு மனைப்பிரிவு அனுமதி கோரி விண்ணப்பிக்கப்பட்ட தங்களின் மனு நாள். 12.05.2023.
2.கடலூர் மாவட்ட உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் கடித ந.க.எண்.TXY8U4CQ/11912/2023/க.மா நாள்.03.07.2023ன்படி வழங்கப்பட்ட தொழில்நுட்ப அனுமதி எண்.ம.வ/ந.ஊ.உ.இ.(கமா) எண்.64/2023.
3. கடலூர் 2நி இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட தான பத்திர ஆவண எண்.2829/2023 நாள்.01.06.2023
4. மனைப்பிரிவு ஒப்புதல் கோரிய இவ்வலுவலக தங்களின் விண்ணப்பம் நாள்.12.07.2023.
5. உதவி செயற்பொறியாளர், கடலூர் மாநகராட்சி அவர்களின் 19.03.2024ம் தேதிய குறிப்பு.
6. மாமன்ற தீர்மான எண்.999 நாள்.28.06.2024.

உத்தரவு:-

பார்வை 1ல் காணும் தங்களின் விண்ணப்பத்தில் கடலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கரையேறவிட்டக்குப்பம் கிராமம், வார்டு எண்.3, பிளாக் எண்.53, நகரளவு எண்:2078/7, 2078/8, 2078/11ல் உள்ள 2.42 ஏக்கர் (9794.50 சதுர மீட்டர்) இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திருவாளர்கள் S.ரகிமாகனி (ம) R.ஞானசேகர் அவர்களின் விண்ணப்பித்ததன் பேரில், பார்வை 2ல் கண்டுள்ள உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கடலூர் அவர்களின் கடித ந.க.எண். TXY8U4CQ/11912/2023/க.மா நாள்.03.07.2023ன்படி ம.வ/ந.ஊ.உ.இ.(கமா)எண்.64/2023 என எண்ணிடப்பட்டு தொழிற்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சாலைகளையும், மின்சாரத் துறைக்கு 'b' என ஒதுக்கீடு செய்யப்பட்ட 34.65 ச.மீ இடத்தையும், உள்ளாட்சிக்கு 'a' என ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது உபயோக ஒதுக்கீடு 35.44 ச.மீ இடத்தை பார்வை 3ல் காணும் கடலூர் 2நி இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் தான பத்திர பதிவு ஆவண எண்.2829/2023 நாள்.01.06.2023 மூலம் மாநகராட்சி பராமரிப்பிற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசாணை எண்.GO(MS)No.181 நாள் 09.12.2020ன்படியும் TNCDBR -2019 விதி 47 (11)ன்படியும் மேற்படி மனைப்பிரிவிற்கு உண்டான அடிப்படை வசதிகளுக்கான மதிப்பீட்டுத் தொகையை சம்மந்தப்பட்ட உள்ளாட்சியில் மனைப்பிரிவு அபிவிருத்தியாளரால் செலுத்தப்பட வேண்டும் என

அறிவுறுத்தப்பட்டு, மேற்படி தொகையை இம்மாநகராட்சி பொறியியல் பிரிவின் பார்வை 5ல் கண்டுள்ள 19.03.2024ம் தேதிய குறிப்பின்படி தெருவிளக்கு 10 எண்கள் அமைத்திட மாநகராட்சி மூலம் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டு ரூ.267860/– பணம் செலுத்தப்பட்டு ரசீது பெறப்பட்டுள்ளது எனவும் மேற்படி மனைப்பிரிவிற்கு அடிப்படை வசதிகளான சாலை, குடிநீர் வசதி மற்றும் மழைநீர் வடிகால் சிறு பாலங்கள் ஆகியவைகள் முறையாக செய்து முடிக்கப்பட்டுள்ளது என்றும், குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கப்பட்டுள்ளது என பொறியில் பிரிவில் சான்று அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், மனைப்பிரிவு அனுமதி கட்டணம் 1 ஏக்கருக்கு ரூ.7500/– வீதம் 2.42 ஏக்கருக்கு ரூ.22,500/– இம்மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி ரசீது எண்.0002252 நாள்.01.07.2024 சமர்பிக்கப்பட்டுள்ளது. எனவே கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் பார்வை 2ல் அளிக்கப்பட்ட நிபந்தனைகளுடன் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

ஆணையாளர்,
கடலூர் மாநகராட்சி.

9/7/24.

இணைப்பு:- மனைப்பிரிவு ஒப்புதல் வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

பெறுநர்:-
திருவாளர்கள் S.ரகிமாகனி (ம) R.ஞானசேகர்
39 கருணாமூர்த்தி நகர்,
கூத்தப்பாக்கம், கடலூர்.

நகல்:-

1) உதவி இயக்குநர் கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
2)உதவி இயக்குநர், (நில அளவை) கடலூர் மாவட்டம்.
3) சார் பதிவாளர், கடலூர் சார் பதிவாளர் அலுவலகம், இணை எண்.1, கடலூர் மாவட்டம்.
4)மாநகராட்சி பொறியாளர்– மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக ஒதுக்கீடு மற்றும் சாலைகள் விவரத்தினை சொத்து பதிவேடு மற்றும் சாலைப் பதிவேட்டில் பதிவு செய்ய